முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.12.02.2025

O.S.No. 188 / 2021

வா.சா.1 டாக்டர்.எஸ்.ஆல்பிரட் சத்தியசேகர்

முதல் விசாரணை தொடர்ச்சி

கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.6 | 08.06.2006 | காமராஜ் மற்றும் சுனிதா பெயரிலான கிரைய ஆவண எண்.1062/2006 | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 29.03.2021 | வாதி பெயரிலான கிரைய ஆவண எண்.765/2021 | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 15.11.2021 | வாதிக்கு எல்.ஐ.சி ஹவுசிங் பைனான்சியல் லிமிடெட் கொடுத்த கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.9 | 09.03.2021 | வாதிக்கு எல்.ஐ.சி ஹவுசிங் பைனான்சியல் லிமிடெட் கொடுத்த கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.10 | 26.07.2022 | வாதி பெயரில் பகலி 1432 ற்கான கரத்தீர்வை ரசீது | அசல் |
| வா.சா.ஆ.11 | 16.02.2021 | காமராஜ் மற்றும் சுனிதா பெயரிலான பசலி 1430 ற்கான கரத்தீர்வை ரசீது | அசல் |
| வா.சா.ஆ.12 | 13.11.2024 | வாதி பெயரிலான பசலி 1434 ற்கான கரத்தீர்வை ரசீது | அசல் |
| வா.சா.ஆ.13 | 05.07.1977 | செட்டில்மெண்ட் கமிஷனர் பிறப்பித்த உத்தரவு | சான்றிட்ட நகல் |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

1) நான் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை படித்து பார்த்தேன். 3ம் பிரதிவாதி அவர்கள் பதிலுரையில் வழக்குச்சொத்து பார்வதிபுரம் உடமூட்டு தர்மத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் எனக்கு உரிமை கிடையாது என்றும் சொல்லியுள்ளார்கள் என்றால் ஆம். 3ம் பிரதிவாதி அவர்கள் தாக்கல் செய்த பதிலுரையுடன் எம்.பி.நம்பர்.61/2016 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இணை ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை அவர்களின் முன்பு எம்.பி.நம்பர்.61/2016 உத்தரவு ஆன விவரம் எனக்கு தெரியாது. அப்படி ஒரு வழக்கு இருந்த விவரம் எனக்கு தெரியாது.

2) நான் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண்.15938/2021 என்ற மனுவினை ஷகினா மருத்துவமனைக்காக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த நீதிப்பேராணை மனுவில் எம்.பி.நம்பர்.61/2016 உத்தரவை செயல்படுத்தக்கூடாது என பரிகாரம் கேட்டிருந்தேன் என்றால் சரிதான். அந்த உத்தரவு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு தெரியும் என்றால் என் கட்டிடத்தில் 26.08.2021 அந்த எம்.பி.61/2016 உத்தரவை ஒட்டியபின்புதான் எனக்கு தெரியும். மேற்சொன்ன நீதிப்பேராணை மனுவை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாக்கல் செய்தேன் என்றால் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன் அது கோப்பிற்கு எடுக்கப்படாமல் இருந்தது ஆகையால் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்திருந்தேன். இந்த வழக்கு நான் 02.09.2021 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

3) நான் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு 07.09.2021 அன்று முடிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நீதிப்பேராணை மனுவில் 07.09.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுதான் என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் உத்தரவு ஆகும். அந்த எம்.பி.நம்பர்.61/2016 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மனுவில் சகினா தோல் மருத்துவமனை இரண்டாவது எதிர்மனுதாரர் என்றால் சரிதான். அதன் விலாசம் கதவு எண்.443 கே.பி ரோடு என உள்ளது. அந்த காலகட்டத்தில் நான் காமராஜிடம் வாடகைக்கு இருந்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் காமராஜ்க்கு

எதிராக தீர்ப்பான விவரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது அவர் எனக்கு அந்த மனு உத்தரவு குறித்து எனக்கு தெரிவிக்கவில்லை.

4) வா.சா.ஆ.13 எவ்வளவு சொத்தற்குரியது என்றோ அது இந்த வழக்குச்சொத்தில் அடங்குமா என்றால் எனக்கு தெரியும். வா.சா.ஆ-13 ஆவணத்தில் எதன் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக உள்ளது என்றால் 29 மாசி 1124 ம் ஆண்டு குமாரசாமி பணிக்கருக்கு செண்பகம் அம்மாள் என்பவர் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி அதன் மூலம் அவருக்கு உரிமைப்பட்டு பட்டா மாற்றி தீர்வை செலுத்தி அனுபவித்து வந்ததின் அடிப்படையில் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக உள்ளது. ஜி1/76 முதல் ஜி1/107 வரை உள்ள சொத்துக்கள் பழைய புல எண்.3147 ற்கு உட்பட்டது என்றால் ஜி1/95 மற்றும் ஜி1/96 மட்டும் கிடையாது. ஜி1/95 மற்றும் ஜி1/96 சொத்திற்கான பழைய புல எண் குறித்து புல ஒப்புமை ஆவணம் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. நான் பழைய புல எண்ணிற்கான புல ஒப்புமை பார்க்காததால் ஜி1/95 மற்றும் ஜி1/96 பழைய புல எண் 3147 ற்கு உரியது அல்ல என சொல்வது தவறு என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.13 உத்தரவில் எதிரிடை பார்த்தியத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. செண்பகம் அம்மாள் அவர்களின் முன் பத்திரங்களை நான் பார்த்ததில்லை. செண்பகம் அம்மாள் குமாரசாமி பணிக்கருக்கு எழுதிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண்.3147 ற்கு உட்பட்ட சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1 மூலமாக பழைய புல எண்ணை தெரிந்துகொண்டு 3 ம் பிரதிவாதி சொத்தை அபகரிக்க வேண்டும் என்று அந்த ரீசர்வே எண். ஜி1/95 மற்றும் ஜி1/96 பழைய புல எண்.3147 இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ள முந்தைய ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முந்தைய ஆவணத்தை பார்வையிட்டால் எதன் அடிப்படையில் சொத்து கிடைத்தது என சொல்லப்பட்டிருக்கும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த முந்தைய ஆவணத்தில் பார்வதிபுரம் உடகூட்டு தர்மத்தற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது.

6) 1907 ம் ஆண்டு திருவிதாங்கோடு ராஜ்யத்தில் செட்டில்மெண்ட் சர்வே நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. மறுநில அளவை 1973 – 1977 வரை நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. 1907 சர்வே செட்டில்மெண்ட்டின்போது புல எண்.3147 ற்கு பார்வதிபுரம் உடமூட்டு தர்மம் பெயரில் பதிவாகியிருந்தது என்றால் எனக்கு தெரியாது. உடமூட்டு தர்மமானது மாசி மாசம் பாதையாத்திரையாக செல்லும் பக்தர்கள் மற்றும் சேவார்த்திகளுக்கு நீர், மோர், கஞ்சி, காய்ந்த வெள்ளம் கொடுக்கும் தர்மம் என்றால் எனக்கு தெரியாது. தற்போதும் மாசி மாதம் திருவிழா சமயம் அந்த தர்மம் நடைபெறுகிறது என்றால் பக்கத்தில் நடைபெறுகிறது. வா.சா.ஆ.13 வை தாக்கல் செய்தது குமாரசாமி பணிக்கர் என்றால் சரிதான். குமாரசாமி பணிக்கர் அசல் வழக்கு எண்.451/1963 வழக்கை சொல்லி அதன் அடிப்படையில் அவருக்கு உரிமை இருப்பதாக சொல்லியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. சாட்சி வா.சா.ஆ-13 ஆவணம் தெளிவாக இல்லை என தெரிவித்தார். வா.சா.ஆ.13 படிக்கக்கூடிய நிலையில் இல்லை என்றால் சரியல்ல காலஅவகாசம் கொடுத்தால் படித்து சொல்லலாம்.

7) வா.சா.ஆ.13 ஆவணத்தில் முதல் பக்கத்தில் கடைசி 5 வரிகளில் என்ன உள்ளது என்றால் காலஅவகாசம் கொடுத்தால் படித்து சொல்லலாம் தற்போது என்னால் படித்து சொல்ல இயலாது என்றால் சரிதான். நான் தற்போது படித்து சொல்லாமல் இருப்பது வா.சா.ஆ.13 ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் படிக்கக்கூடிய நிலையில் இல்லை என்றால் கூர்ந்து படித்தால் படிக்கலாம். வா.சா.ஆ.13 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 ஆவணத்தை படித்து சொல்வதற்கு எவ்வளவு காலஅவகாசம் வேண்டும் என்றால் ஒரு வார காலம் ஆகும்.
வா.சா.ஆ.13 ஆவணம் குறித்து மேற்கொண்டு குறுக்குவிசாரணை தொடர் இருப்பதால் தற்போது குறுக்குவிசாரணை நிறுத்தப்படுகிறது.